www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

## அரசியல் தொடர்

அற்புதன் — எழுதுவது




# கடத்திச் சென்று— காட்டுக்குள் வீசினர்!

முல்லைத்தீவு உட்பட வன்னிப் பகுதிகளில் இந்தியப் படையினர் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிர மாக்கினர்.

இலங்கை அரசுக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுபோலவே அத்தாக்குதல்கள் நடைபெற்றன.

புலிகளும் இந்தியப் படையினர் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருந்தனர்.

1989 ஜூலையில் முல்லைத்தீவு காட்டுப் பகுதியில் புலிகளின் முகாம் ஒன்றை இந்தியப் படையினர் சுற்றிவளைத்தனர்.

புலிகள் பதிற் தாக்குதல் நடத்தியதில் ஐந்து இந்தியச் சிப்பாய்கள் கொல்லப் பட்டனர்.

இந்தியத் துருப்புக்கள் சுற்றிவளைப்பைக் கைவிட்டு பின்வாங்கின. பலியான படையினரின் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

வரலாற்றின் ஓட்டத்தில் சம்பவங்களும், தந்திரங்களும் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதையும் இதில் நோக்கலாம்.

விடுதலை இயக்கங்களிற்கு இந்தியா ஆயுதமும், பயிற்சியும் கொடுத்த காரணம், தமிழீழம் பெற்றுக் கொடுக்க அல்ல என்பது தெரிந்ததுதான்.

இலங்கை அரசை பணியவைத்து பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதும், இந்தியாவின் சொற்படி நடக்க வைப்பதுதான் இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளரின் இறுதித் திட்டமாக இருந்தது.

அதே தந்திரம் பின்னர் இந்திய அரசுக்கு எதிராக இலங்கை அரசுக்கு பயன்பட்டது.

இந்தியப்படையை தாக்க புலிகளுக்கு இலங்கை அரசு ஆயுதம் கொடுத்தது. இந்தியப்படை புலிகளால் அடிவாங்கிக் கொண்டிருக்கையில், ஜனாதிபதி பிரேமதாசா பின்வருமாறு அறிவித்தார்: "இந்தியப்படை வெளியேறியே தீரவேண்டும். இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை."

புலிகளின் இராணுவ் ஆற்றலில் பிரேமதாசாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. இந்தியப்படைக்கு எதிராக புலிகள் நடத்திய தாக்குதல்கள் பிரேமதாசாவுக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தன.

பிரேமதாசாவுடன் நெருக்கமாக இருந்த சிலரது தகவல்களின்படி, பிரபாகரனையிட்டு அடிக்கடி பாராட்டிப் பேசுவாராம் பிரேமதாசா. தன் இருகை முஸ்டிகளையும் மடக்கிக்காட்டி "பிரபாகரன் நன்றாக சண்டைபோடுகிறார்" என்று சொல்வாராம் பிரேமதாசா.

பிரேமதாசா சந்திக்க விரும்பியும் கடைசிவரை அவரால் சந்திக்க முடியாமல்போன ஒருவர் பிரபாகரன்.

"பிரபாகரன் ஏற்கக்கூடிய தீர்வை தன்னால் வழங்க முடியாவிட்டாலும், பிரபாகரனை ஒருமுறையாவது நேரில் காண விரும்பினார் பிரேமதாசா" என்று அவரது நெருங்கிய சகா ஒருவர் கூறினார்.

### பிரேமா கோரிக்கை

இந்தியப் படையினர் புலிகளை தாக்குவதை நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்தது.

இதுவும் இராஜதந்திர நாடகத்தில் திருப்பமான ஒரு கட்டம்தான்.

இலங்கை அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே போர் மூளாமல் தடுக்க வந்தது இந்தியப்படை.

அதே இந்தியப் படை புலிகளுடன் போரிட்டுக் கொண்டிருக்க, இலங்கை அரசு புலிகளின் நண்பனாகியது. இந்தியாவுக்கும் புலிகளுக்கும் இடையிலான போரை நிறுத்த கோரிக்கையும் விட்டது.

மொத்தத்தில், இலங்கைக்கு படை அனுப்பவும், பின்னர் புலிகளுடன் போர் நடத்தவும் இந்திய அரசு கூறிய காரணங்கள் அனைத்துமே வலுவிழந்தன.

அந்த நிலையில் இந்தியப் படைகள் இலங்கையில் நிற்கும் ஒவ்வோர் நிமிடமும் ஆக்கிரமிப்பாகவே கருதப்படும் என்றாகியது.

அதனை இந்திய அரசு உணர்ந்தாலும்கூட, ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியின் அரசியல் தேவை கருதி இலங்கை அரசுடன் முரண்டு பிடிக்க வேண்டியதாயிற்று.

பாராளுமன்றத் தேர்தலை சந்திக்கத் தயாராகிக்கொண்டிருந்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. 'போன மச்சான் வெறுங்கையுடன் திரும்பி வந்தான்' என்று இந்தியப்படை விரைவாகத் திரும்பினால் தேர்தலில் பின்னடைவு ஏற்பட அதுவும் ஒரு காரணமாகிவிடும் என்று நினைத்தார் ராஜீவ்.

ஆகவே, இந்தியப் பொதுத் தேர்தல் நடந்து முடியும்வரை இந்தியப் படையை முற்றாக வாபசாக்குவதில்லை என்று ராஜீவ் காந்தி முடிவுசெய்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதி பிரேமதாசா வளைந்து கொடுக்கத் தாயாராக இருக்கவில்லை.

### ஜே.வி.பி. பிரசாரம்

தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தினரின் நடவடிக்கைகள் தீவிரமாகிக் கொண்டிருந்தன.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுவதும் ஜே.வி.பி.யின் முக்கிய கோஷங்களில் ஒன்றாக இருந்தது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்தவரை அந்தக் கோஷத்தை எழுப்பி தம்மை தேசபக்தர்கள் என்று ஜே.வி.பி. காட்டிக்கொண்டது.

ஆனால், பிரேமதாசாவின் முன்னால் ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்புக் கோஷம் எடுபடவில்லை.

ஏன் தெரியுமா? ஜே.வி.பி.யைவிட வேகமாக இந்திய எதிர்ப்பில் முன்னின்றார் பிரேமதாசா.

இலங்கைத் தொலைக் காட்சியில் இந்தியத் திரைப்படங்கள் ஒளிபரப்புச் செய்வதற்குத் தடை உத்தரவு பிரேமதாசாவிடம் இருந்து பறந்தது.

சார்க் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு பாகிஸ்தானின் தலைநகரில் நடைபெற இருந்தது.

இந்தியப் படை விவகாரத்தில் இந்திய அரசுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டை காரணம் காட்டிய இலங்கை அரசு அதில் கலந்துகொள்ள மறுத்துவிட்டது.

இந்திய எதிர்ப்பில் ஜே.வி.பி. இரகசிய வானொலி தீவிர பிரசாரம் செய்தது.

இலங்கை அரசின் வானொலியில் இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாடுகளை பிரசாரம் செய்ய உத்தரவிட்டார் பிரேமதாசா.

மொத்தத்தில், இந்திய எதிர்ப்பில் ரோகண விஜயவீரா எட்டடி பாய்ந்தால், பிரேமதாசா பதினாறடி பாய்ந்தார்.


நானா

### நானா கொலை

உட்கொலைகள் பற்றிய பட்டியலில் தவறவிடப்பட்ட கொலைபற்றி நண்பர் ஒருவர் நினைவூட்டியிருந்தார். அதனை இங்கு குறிப்பிட்டுவிடுகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈரோஸ் பொறுப்பாளராக இருந்தவர் நானா. இவரது சொந்தப் பெயர் பால்ராஜ்.

திருமலையைச் சேர்ந்தவர் என்றாலும் ஈரோசுக்காக 'நானா' வேலை செய்தது மட்டக்களப்பில்.

பெண்கள் விடயத்தில் நானா பலவீனம் உள்ளவர். பலவீனங்கள் மனித இயல்பு. ஆனால் அந்தப் பலவீனம் பலத்தையும் அழித்து விடுவதாக இருக்கக்கூடாது.

ஒரு ஆணும், பெண்ணும் விரும்பினால் அவர்கள் உடல்ரீதியாக உறவு வைத்துக் கொள்ளலாம் என்பது ஈரோஸ், ஈ.பி.ஆர். எல்.எஃப். இயக்கங்களின் கருத்தாக இருந்தது.



ஆனால் 'நானா' காதலிப்பதாகவும், மணம் புரிவதாகவும் நம்பிக்கையூட்டி ஈரோஸ் பெண் உறுப்பினர்கள் சிலருடனும் உடல் ரீதியாக உறவு வைத்துக்கொண்டார் என்பது ஈரோசின் குற்றச்சாட்டு.

நானாவால் ஏமாற்றப்பட்ட பெண் உறுப்பினர்கள் இருவர் ஈரோஸ் தலைவருக்கு கடிதம் எழுதிவைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டனர்.

மட்டக்களப்பு வர்த்தகர்கள் சிலரிடம் ஈரோசின் பெயரால் பெறப்பட்ட நிதியை நானா கையாடியதாகவும் ஈரோஸ் தலைமைப்பீடம் குற்றம் சாட்டியது.

பெண்களுடன் உள்ள தொடர்பு பற்றி நானாவிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில்: " அது சிகரெட்டுக்கும் உதட்டுக்கும் இடையே உள்ள தொடர்பு போன்றது."

அதேசமயம் இயக்கத் தலைமையுடனும் நானா முரண்படத் தொடங்கினார்.

புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்களின் தலைமைகளிடம் ஒரு பழக்கம் இருக்கிறது.

தங்கள் உறுப்பினர் ஒருவர் சமூகத்திற்கு தீங்கிழைப்பவராக, இயக்க கட்டுப்பாடுகளுக்கு முரண்பட்டவராக நடந்தாலும், தலைமையை கைக்குள் போட்டுக்கொண்டால் பிரச்சனை இல்லாமல் இருக்கலாம். பொறுப்புக்கள் கூட தரப்படும். குறிப்பிட்ட நபர்கள் தொடர்பான ஏனைய உறுப்பினர்களின் நியாயமான விமர்சனங்களைக்கூட தலைமை காதில் போட்டுக்கொள்ளாது.

குறிப்பிட்ட உறுப்பினர்கள் தங்களுடனும் முரண்பட்டால்தான் உடனே அவர்களது தவறுகளைக் கிளறுவர். குற்றப்பத்திரிகை வாசிப்பர்.

நானாவுக்கும் அதுதான் நடந்தது. 'நானா' தமக்கும் பிரச்சனையான ஆளாக மாறியதால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தலைமை முற்பட்டது.

நானா, ஈரோசின் புரட்சிகர நிறைவேற்றுக்குழு என அழைக்கப்பட்ட மத்திய கமிட்டி உறுப்பினர்.

உள்ளே ஏற்பட்ட பிரச்சனையால் நானாவும், இன்னொரு மத்திய கமிட்டி உறுப்பினரான கமலியும் தமது ஆதரவாளர்களுடன் பிரிந்து சென்றனர்.

அதன் பின்னர்தான் நானா பற்றிய குற்றச்சாட்டுக்களை ஈரோஸ் தலைமை உரத்துக் கூறத்தொடங்கியது.

1989ல் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்வெட்டி சின்னத்தில் சுயேட்சைக் குழு 2 இன் தலைவராகப் போட்டியிட்டார் நானா.

ஈரோஸ் சுயேட்சைக் குழுவுக்கு எதிராக நானாவின் சுயேட்சைக் குழுவை ஊக்குவித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

இவ்வாறான நடவடிக்கைகளால் நானாவை தீர்த்துக்கட்ட முடிவு செய்தது ஈரோஸ்.

1989 பங்குனி மாதத்தில் ஒருநாள் திருமலையில் வைத்து நானாவை ஈரோஸ் உறுப்பினர்கள் கடத்திச் சென்றனர். ஈரோஸின் மட்டக்களப்பு இராணுவப் பொறுப்பாளராக இருந்த கஜன் தலைமையில் சென்றவர்களே நானாவை கடத்திச் சென்றனர்.

தமது முகாம் ஒன்றில் வைத்து விசாரித்துவிட்டு நானாவை சுட்டுக் கொன்றனர். திருமலை காட்டுப்பகுதி ஒன்றில் நானாவின் சடலம் 1989 மார்ச் 30ம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கொலையை முன்னின்று கண்டித்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அதற்கு பதிலடியாக ஈரோஸ் மட்டக்களப்பு இராணுவப்பொறுப்பாளர் கஜன் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரால் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். (தொடர்ந்து வரும்)

# தூண்டப்பட்ட குண்டுத் தாக்குதல்

தலதா மாளிகை புலிகளால் தாக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். புலிகளின் தவறான நடவடிக்கைகளை விமர்சிக்கவோ, கண்டிக்கவோ 'முரசு' பின் நிற்பதில்லை.

பௌத்தர்களின் வரலாற்றுச் சின்னமாக கருதப்படுவது தலதா மாளிகை. பௌத்த மக்களின் கலாசார மையங்களில் முக்கியமானது தலதா மாளிகை.

எனவே, தலதாமாளிகை தாக்கப்பட்டமை பௌத்த மக்களின் மனங்களை புண்படுத்தும் ஒரு செயல்தான்.

ஆனால், தலதா மாளிகையை சுதந்திரத்தினப் பொன்விழாவுக்கு தெரிவு செய்தமை சரியா? என்பதும் மிக முக்கியமான கேள்வியாகும்.

இலங்கைத்தீவு பல் தேசிய, பல் மத நாடாகும். ஆயினும் பௌத்த மதத்தை அரச மதமாக்கி இருப்பதால், ஏனைய இன, மத மக்கள் இரண்டாம்தர நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த அநீதிதான் தமிழ் பேசும் மக்களை ஆயுதம் ஏந்திய போராட்டம்வரை கொண்டு சென்றது. நாடெங்கும் யுத்தத் தீ கொளுந்துவிட்டெரியக் காரணமானது.

இந்நிலையில் இன்றைய ஜனாதிபதி இனப்பிரச்சனை தீர்வு பற்றி இனிக்க இனிக்க பேசிவருகிறார்.

தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்றும், அதன் விளைவே தமிழ்பேசும் மக்களின் போராட்டம் என்றும் கூறிவருகிறார்.

ஒரே தேசம் ஒரே மக்கள் என்றும் ஜனாதிபதி கூறிவந்தார்.

இந்த நாடு சகல இன மக்களுக்கும் சொந்தம் என்று காட்டத்தான் அந்தக் கோஷம் என்றனர்.

எல்லாம் சரி, 50வது சுதந்திர தினத்தை மட்டும் ஏன் தலதா மாளிகைக்கு கொண்டு சென்றனர்? ஏன் கண்டியில் கொண்டாட முடிவு செய்தனர்?

அந்நிய ஆக்கிரமிப்பாளர்கள் இங்கு காலடி வைக்க முன்னர் இந்த நாட்டில் சிங்கள மக்களும், தமிழ் மக்களும் தங்களைத் தாங்களே ஆண்டுள்ளனர். தனித் தனி ஆட்சிகளையும், ராசதானிகளையும் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியன், வன்னி மன்னன் பண்டாரவன்னியன் ஆகியோர் அந்நியரை எதிர்த்து வீரம் செறிந்த போராட்டங்களை நடத்தியும் இருக்கின்றனர்.

அதேபோல சிங்கள மக்களும் அவர்களது மன்னர்களும் அந்நியரை எதிர்த்து போரிட்டுள்ளனர்.

சிங்கள மக்களின் கடைசி ராசதானியாகக் கருதப்படுவதுதான் கண்டி. திராவிட இனத்தைச் சேர்ந்தவனும், நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவனுமான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தான் கண்டியின் கடைசி மன்னன்.

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கும் வன்னியில் ஆண்ட தமிழ் மன்னன் பண்டாரவன்னியனுக்கும் இடையே நட்பு இருந்தது. அந்நியரை எதிர்த்துப் போராடுவதில் பரஸ்பர உதவிகள் தொடர்புகளும் இருந்தன.

அந்நியரை எதிர்த்துப் போராடியதில் சிங்கள மன்னர்களோ, தமிழ் மன்னர்களோ சளைத்தவர்களல்ல. தங்களுக்குள் கோடாலிக் காம்புகளாக இருந்த காட்டிக் கொடுப்பாளர்களால்தான் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனும் வீழ்ந்தான். பண்டார வன்னியன், சங்கிலியன் போன்றோரும் வீழ்ந்தனர்.

எனவே, ஒரு இனத்தைச் சேர்ந்தோர் மட்டுமோ, ஒரு மதத்தைச் சேர்ந்தோர் மட்டுமோ பழம் பெருமை பேசுவது முறையல்ல.

சுதந்திரம் நாடு முழுமைக்கும் உரியது என்றால், சகல இன, மத மக்களுக்கும் உரியது என்றால், எந்தவொரு இன, மதப் பெருமைக்கும் முன்னுரிமை கொடுப்பதாக சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெறக் கூடாது.



மூன்று இனத்திற்கும், நான்கு மதத்துக்கும் பொதுவான இடத்தில் 50வது சுதந்திரதினப் பொன்விழா கொண்டாடப்பட்டு இருக்குமானால் அது பொருத்தமாக இருந்திருக்கும்.

ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப இன்றைய ஜனாதிபதி இதய சுத்தியுடன் கருமம் ஆற்றுகிறார் என்று அவரை எண்ணிப் பெருமை கொள்ள முடிந்திருக்கும்.

ஆனால், இனிப்பான பேச்சுக்களுக்கு அப்பால், சுதந்திரப் பொன்விழாவை பௌத்த மத கலாசார மையத்திற்கு கொண்டுசெல்லும் பௌத்த மேலாதிக்க மனப்போக்குத்தான் இன்று மேலோங்கி இருக்கிறது என்பதையே நடப்புக்கள் நமக்கு உணர்த்துகின்றன.

இதனைச் சுட்டிக்காட்ட தமிழ், முஸ்லிம் தலைவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் முன்வரவில்லை.

தலதா மாளிகையை சுதந்திர தின கொண்டாட்டம் நடைபெற உள்ள இடமாக மாற்றியது மூலம், அங்கு தாக்குதல் ஒன்றுக்கான தூண்டுகோலை அரசுதான் ஏற்படுத்தியிருக்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருப்பதில் உண்மை இருக்கிறது.

அதுவும், புலிகளின் தளமான வன்னியை ஊடறுத்து தரைப்பாதை ஒன்றை திறந்துவிட்டு சுதந்திரதினத்தை கொண்டாடப் போவதாக சவால் விட்டது அரசாங்கம்.

இப்படியெல்லாம் அரசியல், இராணுவ நலனுடன் சார்ந்த ஒன்றாக சுதந்திர தின விழாவை மாற்றிவிட்டு, புலிகளுக்கு சவால் விட்டுவிட்டு, புலிகள் தாக்குதல் நடத்தமாட்டார்கள் என்றும் அரசு நினைத்துக் கொண்டு இருந்திருந்தால் அது யார் தப்பு?

கண்டி தலதா மாளிகை தாக்கப்பட்ட பின்னர் அங்குள்ள தமிழ்க் கடைகள், இந்து ஆலயம், வாகனங்கள் என்பவை தாக்கப்பட்டுள்ளன.

நியாயமான கோபம் என்பதுபோல அதனைச் சித்தரிக்கப் பார்க்கிறார்கள். தலதா மாளிகைத் தாக்குதலை கண்டித்தவர்கள், இந்து ஆலயத் தாக்குதலை மட்டும் கண்டிக்காமல் இருப்பதும் விந்தைதான். சில தமிழ்க் கட்சித் தலைவர்கள்கூட இந்து ஆலயம் தாக்கப்பட்டதை கண்டிக்கவில்லை.

தலதா மாளிகை தாக்கப்பட்டதால்தான் இந்து ஆலயம் தாக்கப்பட்டது என்பது சரியான நியாயமல்ல.

அப்படிப்பார்த்தால், வடக்கு-கிழக்கில் ஏராளமான இந்து, கிறிஸ்தவ ஆலயங்கள் குண்டுவீச்சுக்களால் தாக்கப்பட்டுள்ளன.

நல்லூரில் கடைசி மன்னன் சங்கிலியனின் சிலை சூரியக்கதிர் நடவடிக்கையின் போது உடைந்து தலைகீழாகத் தொங்கியது. சங்கிலியன் தோப்பின் கட்டட தூண்கள் ட்ரக் வண்டிகளால் கட்டி இழுத்து வீழ்த்தப்பட்டன.

வடக்கு-கிழக்கில் உள்ள எத்தனையோ வரலாற்றுச் சின்னங்களை அரசு பாதுகாக்கவோ, பத்திரப்படுத்தவோ முன்வரவில்லை. அவை தடம் இல்லாமல் அழிந்து வருகின்றன.

எனவே, நீதி, அநீதி பற்றி யார் மீது யாரும் குற்றம்சாட்ட முடியாத நிலைதான் இங்கு இருக்கிறது. நடைபெறுவது யுத்தம்! அதன் பாதிப்புக்கள் சகல இன, மத மக்களையும் புண்படுத்தியுள்ளன.

எனவே, இந்த அனர்த்தங்கள், அழிவுகள், நிம்மதிக் குலைவுகள் என்பவற்றுக்கான அடிப்படைக் காரணத்தை சுத்தமாக அழித்தொழிப்பதே ஒரே ஒரு பரிகாரமாகும்.

அதாவது; வறட்டுக் கௌரவங்களையும், சுயநல அரசியல் வரையறைகளையும் தாண்டி வந்து யுத்தத்தை நிறுத்திவிட்டு, நீதியான தீர்வொன்றுக்கான நிபந்தனையற்ற பேச்சை அரசும், புலிகளும் ஆரம்பிக்க வேண்டும்.

புலிகளுக்கு இராணுவத் தீர்வு இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு என்று பேசுவது அர்த்தமில்லாதது. இனப்பிரச்சனை இல்லாமல் புலிகள் இல்லை. புலிகள் இல்லாமல் இனப்பிரச்சனைக்கு தீர்வும் இல்லை. இது புலிச் சார்பு கருத்தல்ல. நடைமுறையில் மிக துல்லியமாக நிரூபணமாகியுள்ள கருத்து.



தமிழ்க் தேசிய ஆவணச் சுவடிகள்